THILLAI MAIL

20 NOV 2022

PAGE 6

# பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங் “நவாப் பகதூர் சையத் நவாப் அலி சவுத்ரி” விருது

புதுச்சேரி, நவ.20–

பங்களாதேஷின் ராஜ்ஷாஹி பல்கலைக்கழகத்தின் கலைப் புலம் ஏற்பாடு செய்த "கலை மற்றும் மானுடவியல் சூழல்களும் சிக்கல்களும்" என்ற சர்வதேச மாநாட்டில், புதுவை பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங்கிற்கு "நவாப் பகதூர் சையத் நவாப் அலி சௌத்ரி" விருதை கடந்த 13ம் தேதி வழங்கப்பட்டது.



சிறந்த நிர்வாகம், கல்வியியல் பணிக்காகவும் கரிமானம் – திறன் பொருட்கள் ஆராய்ச்சித் துறையில் சர்வதேச அளவில் பங்களிப்பு செய்தமைக்காகவும் பேராசிரியர் குர்மீத் சிங் இந்த விருது வழங்கப்பட்டது.

வங்காளதேசத்தின் ராஜ் ஷாஹி பல்கலைக் கழகத் தின் துணைவேந்தர் பேராசிரியர் கோலம் ஷபீர் சத்தார், ஈரான் இஸ்லாமியக் குடியரசு தூதரகத்தின் கலாச்சார ஒருங்கிணைப்பாளர் டாக்டர் சையத் ஹசன் சேஹாத் டாக்கா மற்றும் அமெரிக்கா, பிரான்ஸ், இந்தியா, ஈரான், நேபாளம், பாகிஸ்தான், துருக்கி மற்றும் தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளின் அதிகாரப்பூர்வ பிரதிநிதிகள் முன்னிலையில் பேராசிரியர் குர்மீத் சிங் அவருக்கு "நவாப் பகதூர் சையத் நவாப் அலி சவுத்ரி விருது 2022" வழங்கப்பட்டது.

"கலை மற்றும் மானுடவியல் சூழல்களும் சிக்கல்களும்" என்ற இந்த சர்வதேச மாநாடு, பங்களாதேஷ், டாக்காவில் உள்ள கொள்கை ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து அதன் தலைவர் பேராசிரியர் அக்பருதீன் அகமது தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

DINAKARAN

20 NOV 2022

PAGE 15

## புதுவை பல்கலைக்கழகத்தில்

# ஜன்ஜாதிய கவுரவ் திவாஸ் அனுசரிப்பு

புதுச்சேரி, நவ. 20: நாட்டின் வரலாறு மற்றும் கலாசாரத்திற்கு பழங்குடி சமூகங்களின் பங்களிப்பை நினைவு கூறும் வகையில் புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் 2வது ஜன்ஜாதிய கவுரவ் திவாஸ் அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி, பேச்சு, வினாடி-வினா, ஓவியப்போட்டி, கலாசார நிகழ்ச்சிகள், புகைப்பட கண்காட்சி போன்றவை நடத்தப்பட்டது. இவ்விழாவில் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் டோகா ஸ்வு வரவேற்றார். பல்கலைக்கழக கல்வி புத்தாக்கம் மற்றும் கிராமப்புற மறுசீரமைப்பு ஆய்வுகள் இயக்குநர் தரணிக்கரசு தலைமை தாங்கினார். மேலாண்மை துறை பேராசிரியர் மோதிலால் சிறப்புரையாற்றினார்.




புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் பழங்குடி சமூகங்களின் பங்களிப்பை நினைவு கூறும் வகையில் ஜன்ஜாதிய கவுரவ் திவாஸ் அனுசரிக்கப்பட்டது.

சிறப்பு விருந்தினராக பல்கலைக்கழக பதிவாளர் (பொறுப்பு) அமரேஷ் சமந்தராயா கலந்து கொண்டு பழங்குடியினரின் நல்ல இயல்பு மற்றும் விருந்தோம்பல் குறித்த தன்னுடைய அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். பழங்குடியின சமூகங்களுக்கான அரசு திட்டங்கள் என்ற தலைப்பில் பேராசிரியர் விஜய்குமார் பேசினார். நாட்டின் வரலாறு மற்றும் கலாசாரத்தில் பழங்குடியின சமூகங்களின் பங்களிப்புகள் குறித்து பேராசிரியர் பாகோலால் ஹாக்கிப் பேசினார். இவ்விழாவில் பேராசிரியர் ஹர்ஷ் மீனா, மங்ஹோலன் சிங்சன், ரிஜாய்சன் தங்கல் உட்பட பலர் கலந்து கொண்டனர். பேராசிரியர் ரிஜாய்சன் தங்கல் நன்றி கூறினார்.